தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2006
அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

பேச்சுப் போட்டி 2006
(மத்திய பிரிவு – 8 முதல் 10 வயது வரை)

# மண்ணின் தாகம்

எமது தாய் மொழி இனிமை வாய்ந்த தமிழ்மொழி. உலகில் வழங்கிவரும் மொழிகளில் இது மிகவும் தொன்மையானது. தமிழரின் உயரிய நாகரீகமும் கலாசாரமும் உலகிலேயே சிறந்தது அன்றோ? இன்று தமிழர்கள் பிறந்த மண்ணைப் பிரிந்து பல நாடுகளிற் குடியேறி உள்ளார்கள். புகுந்த நாட்டுக் கலாசாரங்களின் தாக்கத்தால் தமிழரின் கலாசாரம் இன்று மங்கி வருகிறது. புகழ் கொண்ட கன்னித் தமிழின் வளர்ச்சி தளர்ச்சி அடைகிறது. ஆங்கிலம் வடமொழி போன்ற பிறமொழிகள் தமிழுடன் கலந்து பேசப்படுகின்றன. இதனால் தமிழின் ஒலித் தூய்மை கெடுகிறது. செந்தமிழ் வழக்கு நலிவு பெறுகிறது. இலக்கண மரபும் மறக்கப் படுகிறது.

ஆம்! தமிழனின் பண்டைய கலாசாரத்தின் பாதுகாப்பு அவசியமாகிறது. கலப்பற்ற செந்தமிழ் வளர்ச்சி காலத்தின் தேவையாகிறது. தமிழ் மொழியின் புனிதத் தன்மையைப் பேணுவது முக்கிய பணியாகிறது. இப்படியான எதிர்பார்ப்புகளே எம் தாய் மண்ணின் தீராத தாகம் அல்லவா?

எம் மண்ணின் தாகத்தைத் தீர்ப்பது இளைய தலைமுறையின் முக்கிய கடமையாகும். ஒரு தாயின் பிள்ளைகள் என நாம் ஒன்றுபட வேண்டும். ஒற்றுமை பேண வேண்டும். வீட்டிலும் வெளியிலும் வெட்கப்படாது நாம் தமிழிற் பேச வேண்டும். "தேமதுரத் தமிழ் ஓசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவை நனவாக்குவோம்! தமிழ் மொழி வளர்த்துத் தாய்மண் காக்க எம்மாலான உதவிகளை நாம் முன்னின்று செய்வோம். தமிழனுக்குத் தனிநாடு மலரும் காலம் ஒருநாள் வரும். அன்று தமிழ் மண்ணின் தாகம் தீருவது உறுதி. வாழ்க தமிழ்!

**போட்டி விதிமுறைகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய விபரங்கள்:**
Tele: 0433 088 725 or 02-9758 7970. E-mail: tamilcomp@yahoo.com Web: www.unifundproject.org
P.O.Box 4040 Homebush NSW 2140.